# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2022 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*(2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2022, பெப்புருவரி மாதம் 18 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2022 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

*ச.வ.- ஓ. 2/2018*

### 1979 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தினை திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டகோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்*

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டகோவைச் சட்டத்தின் 195 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சட்டத்தின் 195ஆம் பிரிவினைத் திருத்துதல்*

(1) அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(இ) 195அ என்னும் பிரிவின்கீழ் நடாத்தப்பட வேண்டிய முன்விளக்க மாநாட்டு தேதியினை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் இன்னலுற்ற திறத்தவருக்கும் அறிவித்தல் வேண்டும்;";

(2) அதன் (உஉ) என்னும் பந்தியினை நீக்குவதன் மூலமும்.

**3.** முதன்மைச் சட்டவாக்கமானது அதன் 195ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவினை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 195அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:- *முதன்மைச் சட்டவாக்கத்தில் 195 அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்*

**"அ-1-முன்விளக்க மாநாடுகள்**

*முன்விளக்க மாநாடுகள் மேல் நீதிமன்றத்தில் நடாத்தப்படுதல்*

195அ. (1) முன்விளக்க மாநாடு -

(அ) 195ஆம் பிரிவின் நியதிகளின் படி குற்றஞ்சாட்டப்பட்டவரின் மீது சேர்ப்பிக்கப்பட வேண்டிய குற்றப்பகர்வின்மீது குற்றஞ்சாட்டப்பட்டவரின் முன்னிலையில் நடாத்தப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) 241ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் காரணத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டவர் சமூகமளிக்காமல் இருக்குமிடத்து அல்லது 241ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட காரணங்களிற்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்மீது குற்றப்பகர்வினை சேர்ப்பிப்பது இயலாததாக இருக்குமிடத்து குற்றஞ்சாட்டப்பட்டவர் சமூகமளிக்காதிருக்கையில் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) முன்விளக்க மாநாடு பின்வருவோரின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்படுதல் வேண்டும்:-

(அ) விடயத்திற்கேற்ப (இதனகத்துப் பின்னர் "வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர்" எனக்குறிப்பீடு

செய்யப்படும்) சட்டத்துறைத் தலைமையதிபதி அல்லது சட்டத் துறைத் தலைமையதிபதியினால் தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக 193 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அலுவலரொருவர் அல்லது இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கான பணிப்பளர் தலைமையதிபதி அல்லது இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய ஆணைக் குழுவின் அலுவலரொருவர் அல்லது அத்தகைய பணிப்பாளர் தலைமையதிபதியினால் தொடுக் கப்பட்ட வழக்குநடவடிக்கைகள் தொடர்பாக அத்தகைய ஆணைக் குழுவினால் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவ ரேனும் சட்டத்தரணி;

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பில் தோன்றுகின்ற சட்டவுரைஞர் எவரேனும் இருப்பின் அவர்;

(இ) முன்விளக்க மாநாட்டில் பங்குபற்றுவதற்கு இன்னலுற்ற திறத்தவரின் அல்லது சட்டவரைஞரின் விண்ணப் பத்தின் மீது அத்தகைய இன்னலுற்ற திறத்தவரின் சார்பாக தோன்றுகின்ற இன்னலுற்ற திறத்தவர் அல்லது சட்டவரைஞர் எவரேனும் இருப்பின் அவர்;

(ஈ) எந்த பொலிஸ் நிலையத்தின் தவறொன்று தொடர்பிலான புலனாய்வு நடாத்தப்பட்டுள்ளதோ அந்தப் பொலிஸ் நிலையத்தின் அப்போதைக்கு பொறுப்பிலுள்ள அலுவலர் அல்லது அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அலுவலர்; அத்துடன்

(உ) சட்டத்தரணி அல்லது பங்குபற்றுவதற்கென, வழக்குக்கான திறத்தவர்களின் சம்மதத்துடன் தலைமைதாங்கும் நீதிபதியினால் அனுமதிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலர்;

(3) முன்விளக்க மாநாடு பின்வரும் நோக்கங்களுக்காக நடாத்தப்படுதல் வேண்டும்:-

(அ) குற்றஞ்சாட்டப்பட்டவர் எந்தப் பொருட்களை பெறுவதற்கு சட்டரீதியாக உரித்துடையவராக இருக்கின்றாரோ அந்தப் பொருட்களை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழக்குத்தொடுநர் கையளித்துள்ளாரா என்பதை நிச்சயிப்பதற்கும் மற்றும் அதன் பொருட்டு நீதிமன்றத்தினால் தோதான கட்டளைகளை ஆக்கும் நோக்கத்திற்கும்;

(ஆ) குற்றப்பகர்விலுள்ள குற்றச்சாட்டுகளில் ஏதேனும் ஒன்றுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட

வற்றிற்கு அல்லது குறைந்த தவறொன்றிற்கு குற்றஞ் சாட்டப்பட்டவர் குற்றவாதுரை செய்வதற்கு உட்கருதுகின்றாரா என நிச்சயிப்பதற்கும்;

(இ) 126அ என்னும் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு அவரது தண்டனைத்தணிப்பு அல்லது குற்றத்திலிருந்து விடுவிக்கும் எதிர்வாதம் மற்றும் தலத்திலா வாதம் என்பன பற்றிய முன் அறிவித்தலை வழங்குவதற்கு குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு சந்தர்ப்பம் ஒன்றை வழங்குவதற்கும்;

(ஈ) குற்றப்பகர்வானது ஒரு யூரர் சபையினால் விளங்கப்படத்தக்க தவறொன்று தொடர்பிலான தாயின், குற்றஞ்சாட்டப்பட்டவர் யூரர்சபை ஒன்றினால் விளங்கப் படுவதற்கு விருப்புத்தெரிவிக் கின்றாரா அல்லவாவென அவரிடம் கேட்பதற்கும் அல்லது 208 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட விசேட யூரர்சபை தேவைப்படுகின்றதாவென் பதை வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞரிடம் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் கேட்பதற்கும்;

(உ) நிபுணரான சாட்சிக்காரர்களின் அறிக்கைகள் நீதிமன்றத்தினால்

பெறப்பட்டும் அத்துடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சேர்ப்பிக்கப்பட்டும் உள்ளதா எனவும் அத்துடன் அதன் பொருட்டு தோதான கட்டளைகள் ஆக்கவில்லையாயின் அதுபற்றியும் நிச்சயிப்பதற்கும்;

(ஊ) பிரிவு 420 இன் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு நிபுணரான சாட்சிக்காரர்களின் அறிக்கைகள் தொடர்பான ஒப்புதல்கள் மற்றும் அத்தகைய அறிக்கைகளின் உள்ளடக்கம் உட்பட குற்றஞ் சாட்டப்பட்டவரின் ஒப்புதல்கள் எவையேனும் இருப்பின் அவற்றைப் பதிவதற்கும் :

ஆயின் எவ்வாறாயினும், குற்றஞ்சாட்டப்பட்டவர் சட்டத் தரணியொருவரின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படாதிருப்பின், வழக்குத்தொடுநரினால் யோசனைகூறப்பட்ட ஒப்புதல்கள் எவையும் பதியப்படுதலாகாது;

(எ) சான்றுபற்றிய குறித்தசில விடயங்களை ஏற்கத்தக்கனவாக்குவதற்கு முன்நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதனை நிச்சயிப்பதற்கும் அத்துடன் அதன்பொருட்டு கட்டளை ஆக்குவதற்கும்;

(ஏ) பிரிவு 263 இல் குறித்துரைக் கப்பட்டவாறு விளக்கம் ஒன்றை நடாத்துவதற்காக சாட்சிக் காரர்களை விசாரணை செய்தல் உட்பட அவர்களது முறையான வழக்குகளை முன்வைப்பதற்கு முறையான திறத்தவர்களை தேவைப்படுத்தியிருக்கக் கூடிய தான அண்ணளவான காலப் பகுதியை வழக்குத்தொடுக்கும் மற்றும் எதிர்வாதிடும் சட்டவுரை ஞரிடமிருந்து நிச்சயிப்பதற்கும்;

(ஐ) நீதிமன்றத்தில் சாதாரணமாக கிடைக்கக்கூடியதாக இருக்காத மேலதிக வசதிகள் வழக்கு தொடுநர் மற்றும் எதிர்வாதிடு நரின் வழக்குகளின் முன்வைப்பை தேவைப்படுத்தலாமா என நிச்சயிப்பதற்கும் அதன்பொருட்டு தோதான கட்டளைகளை ஆக்கு வதற்கும்;

(ஒ) காண்பிப்புகள், காட்சிப் பொருட்கள், வேறு ஏதேனும் உண்மைச்சான்று, அறிக்கைகள், புத்தகங்கள் பதிவேடுகள் அல்லது விளக்கத்தில் வழக்குத் தொடுநரினாலும் எதிர்வாதிடு நரினாலும் தேவைப்படுத்தக் கூடியதான வேறு ஏதேனும் பொருட்கள் என்பவற்றுக்கான கிடைப்பனவை நிச்சயிப்பதற்கும் அதன்பொருட்டு அவசியமான கட்டணங்களை ஆக்குவதற்கும்;

(ஓ) சமகால ஒலி, ஒளி இணைப்பு ஊடாக ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட சாட்சிக்காரர்களின் சான்று முன்வைக்கப்படக் கூடுமான என நிச்சயிப்பதற்கும் அவ்வாறாயின் அதன்பொருட்டு தோதான கட்டளைகள் மற்றும் ஒழுங்குகளை ஆக்குவதற்கும் ;

(ஔ) பிரிவு 263 இல் குறித்துரைக் கப்பட்டவாறு விளக்கம் ஒன்றை தொடங்குவதற்கு இயன்றளவு விரைவாக திகதி ஒன்றை நிர்ணயிப்பதற்கும்;

(க) விளக்கம் தொடங்குவதற்கு முன்னர் கவனிப்பதற்கு தேவைப்படுத்தக்கூடியதும் விளக்கத்தினைநடாத்த வசதி அளிக்கக் கூடியதும் ஆன வேறு ஏதேனும் விடயம் தொடர்பாக கவனிப்பதற்கும் அவை தொடர்பாக கட்டளைகளை ஆக்குவதற்கும்; அத்துடன்

(ங) சட்டமுறையான நியாயமான தான மற்றும் விரைவான விளக்கம் ஒன்றை நடாத்துவதை உறுதிப்படுத்துவதற்கு அவசிய மாக இருக்கக்கூடியவாறான வேறு எவையேனும் முடிபு களையும் நடவடிக்கைகளையும் எடுப்பதற்கும்.

(4) 1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 5இ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு மேல்நீதிமன்ற நீதிபதி அல்லது பதியும் நீதிபதி முன்விளக்க மாநாட்டிற்கு தலைமைதாங்குதல் வேண்டும்.

(5) இயன்றளவு விரைவாக முன்விளக்க மாநாட்டினை முடிவு செய்வதற்கு எல்லா முயற்சிகளும் செய்யப்படுதல் வேண்டும்:

ஆயினும் எவ்வாறாயினும், முன்விளக்க மாநாடு ஒன்று குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றம் முன்னர் தோன்றியுள்ள தேதியிலிருந்து அல்லது நீதிமன்றம் முன்னர் தோன்றுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றினுள் முடிபு செய்யப்படுதல் வேண்டும்.

(6) நீதாய விளக்கம் தொடர்பான முன்விளக்க மாநாடு ஒன்று இயைபான வழக்கை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட மூன்று நீதிபதிகளின் முன்னர் மட்டும் நடாத்தப்படுதல் வேண்டும்.

(7) முன்விளக்க மாநாடு ஒன்றின் இறுதியில், தலைமைதாங்கும் நீதிபதி –

(அ) முன்விளக்க மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிபுகளை வாசித்து விளங்கப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய முடிபுகளின் உள்ளடக்கத்தை திறத்தவர்களுக்கும் புரியச் செய்கின்ற நிகழ்வை பதிவு செய்தலும் வேண்டும். இந்த முடிபுகள் நீதிபதியினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சாட்சிக்காரர்களின் கிடைப்பனவுத் தன்மை பற்றிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்கு (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அலுவலரை தேவைப்படுத்துதல் வேண்டும்.

(8) இப்பிரிவின் நோக்கத்திற்காக —

''இன்னலுற்ற திறத்தவர்'' என்பது தவறொன்றைப் புரிவதன் விளைவாக உடல்ரீதியாகவோ, உளரீதியாகவோ அல்லது உணர்வு ரீதியாகவோ அல்லது ஏதேனும் பொருளாதார இழப்பு ரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ ஊறிற்கு, தீங்கிற்கு, சீர்கேட்டிற்கு அல்லது இயலாமைக்கு உட்பட்டுள்ள ஆளொருவர் அத்துடன் இன்னலுற்ற திறத்தவர் பிள்ளை ஒன்றாக இருப்பின், அத்தகைய பிள்ளையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் மற்றும் அத்தகைய இன்னலுற்ற திறத்தவர் இறந்திருப்பின் அவரது நெருங்கிய உறவினர் அதாவது அவரது உயிர்வாழும் மனைவி, பிள்ளைகள், பெற்றோர்கள், சகோதரர்கள், சகோதரிகள் அல்லது அடுத்துவரும் வழியுரிமையாளர்கள் எனப் பொருள்படும்;

''பிள்ளை'' என்பது பதினெட்டு வயதிற்கு கீழான ஆளொருவர் எனப்பொருள் படும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 208 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 208 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

''(1) (அ) வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர், வழக்கை விளங்குவதற்கு விசேட யூரர்சபையொன்று அழைக்கப்படுவதனைத் தேவைப் படுத்துகின்ற கட்டளையொன்றுக்காக முன்விளக்க மாநாட்டில் மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன் முன்விளக்க மாநாட்டிற்குத் தலைமை தாங்கும் நீதிபதி அத்தகைய விண்ணப்பத்தைப் பதிதலும் வேண்டும்.

(ஆ) விளக்கம் தொடங்குகையில் விளக்க நீதிபதி அத்தகைய விண்ணப்பத்தைக் கவனத்துக்கெடுத்தல் வேண்டுமென்பதுடன் அவ்விண்ணப்பமானது நீதியான தும் நியாயமானதுமென அவர் கருதுமிடத்து அதற்கிணங் கக் கட்டளை ஆக்கலாம்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*